## 50 ஐத் தொட்ட 67…

ஓ…….எனதருமை
அறுபத்தேழுகளே!
நீங்கள் இன்னமும்
இளைஞர்களே…..
உங்களுக்குத் தெரியுமா,
இளமைக்கும் முதுமைக்கும்
எது எல்லைக்கோடு?
நாற்பது என்பது
இளமையின் முதுமை
ஐம்பது என்பது
முதுமையின் இளமை
பயந்தவனுக்கு
இளமையும் முதுமை
துணிந்தவனுக்கு
முதுமையும் இளமை
காலம் இன்னமும்
கடந்து விடவில்லை
வாழ்வின் பாதி - இன்னமும்
உங்கள் பாக்கெட்டில்- அந்தவயது
உங்கள் உத்தரவுக்காக
காத்துக்கிடக்கிறது
காலத்தைக் கட்டிப்போடுவது
உங்கள் கைகளில்- நீங்கள்
உயர உயர- இன்னமும்
உயரப் பறந்து
உற்றார், உறவினரை
நண்பர்களை - ஏன் உலகத்தையே
உயரே அழைத்துச் செல்க..
அதுவே துணிவு
அதுவே உங்கள்
அழியாத அடையாளம்

இப்படிச் சொல்வது
அதுவும் ஒரு
அறுபத்தேழுதான்
அறுபத்தேழு அல்ல
அறுபத்தேளில்…
ஆம் நான்
அறுபத்தேழு அல்ல
எனக்கு அறுபதேழு…

இதுவும் சற்று மூத்த
**உங்களில் ஒருவன்**




